IOR PRESS
INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
OPEN ACCESS
ISSN 2582-1113
UGC care under ...
irjt.iorpress.org

# திருவட்டார் ஆதிகேசவ பெருமாள் கோவில் கலை வடிவங்கள்

தி. அல்பாகிரேஸ் அ*, த. மினி அ

அ தமிழாய்வு மையம், முஸ்லிம் கலைக் கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி), திருவிதாங்கோடு-629174, இந்தியா

# Art Forms of Thiruvattar Adikesava Perumal Temple

T. Alpha Grace a*, T. Mini a

a Department of Tamil, Muslim Art's College, (Manonmaniam Sundaranar University, Abhishekapati, Thirunelveli), Thiruvithancode-629174, India.

* Corresponding Author
[illegible]@gmail.com

Received: 12-06-2021
Revised: 30-09-2021
Accepted: 22-10-2021
Published: 30-10-2021

ABSTRACT

Sculpture is one of the traditional arts of Tamils. Arts are a cultural sign of human civilization. Apart from that, all our art forms have a long history. Sculptures can be seen everywhere like the floor, wall, pillars, plane, tower etc. of the temple building. There are no temples without sculptures. We can cite the sculptures and pictorial art forms of Tiruvattar temple as evidence that our forefathers built temples for deity worship as art galleries.

Keywords: Thiruvattar Adikesava Perumal, Sculptures, pillars, Serpents, Temple

Check for updates

## முன்னுரை

பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து வரும் இந்த கிராமத்தின் உயிர் துடிப்பினைதிருவட்டார் ஆதிகேசவ பெருமாள் கோவில் சிற்பங்களில் காண முடியும். அதுமட்டுமின்றி, நமது சமுகத்தில் வாழ்ந்து மறைந்த அனைத்து துறைகளிலும் உள்ளவர்கள், கிராமவாசிகள் பக்க சுவர்களிலும் கல் தூண்களிலும் வரிசையாக நின்று நம்மிடம் பேசுவது போன்று தோன்றுமாறு காட்சியளிப்பது குறிப்பிடத்தக்கதாகும். அதாவது ஆண்கள், பெண்கள் வேலையாட்கள், சுமட்டு தொழிலாளிகள், புரோகிதர்கள், மேலாளர்கள், கீழாளர்கள், அரசர்கள், ராணிமார்கள்,தேவர்கள், அப்ஸரஸ்கள், கந்தர்வர்கள், அரக்கர்கள், முனிவர்கள், யோகிகள், வாயில் காவலர்கள், ஆலய காப்பாளர்கள், நவக்கிரகங்கள், அஷ்டதிக் பாலகர்கள் ஆலய வடிவமைப்புக்கு பயன்படுத்தப்பட்ட அளவு கருவிகள், தந்திர சக்கரங்கள் போன்றவையும் கண்கொள்ளாக் காட்சியாக உள்ளது. குறிப்பாக நாகரிகம் மற்றும் அநாகரிகமான தோற்றங்களைக் கலை அழகில் காட்டுகின்ற சிலைகளும் இக்கோவிலில் உள்ளன. பறவைகள், விலங்குகள், சர்ப்பங்கள், புராண மனிதர்கள், போர்க்களங்கள், திருவிழாக கோலங்கள் போன்ற நிகழ்ச்சிகளும் தத்ருபமாக செதுக்கப்பட்டுள்ளது கலை வடிவங்களுக்கு சான்றாக அமைகிறது.

## சிற்பக்கலை

"சிற்பக்கலை மனிதர், விலங்கு, பறவை, தாவரம் முதலான உலகத்திலுள்ள பொருள்களின் வடிவத்தையும், கற்பனையாகக் கற்பித்து அமைக்கப்பட்ட பொருள்களின் உருவத்தையும், அழகு பட அமைப்பது இந்த சிற்பக்கலை." (Venkadasamy, 2003)

 DOI: 10.34256/irjt21432

உயர் துடிப்புள்ள இந்த கலை வடிவங்கள் அனைத்து காலத்திற்கும் விலைமதிப்புள்ள நன்கொடைகளாகும். புராண கதைகளைக் காட்சிப்படுத்தும் விதத்தில் இங்கு அத்ரி முனிவரின் மனைவி அனுசயா அம்மையாரின் கற்புடைய வாழ்க்கையைப் பறைசாற்றும் விதமாகநிகழ்ந்த கதையானது சபா மண்டபத்தில் சிற்பமாக காட்சியளிக்கிறது.ஆனால் சிற்பத்தை பலவிதமாக சேதப்படுத்திய நிலையில் தற்போது நாம் பார்க்க முடியும்.அழகு கலைகள் மனித நாகரீகத்தின் பண்பாடாக விளங்குகின்றன (Venkatasamy, 2006). உலகம் எங்கும் நாகரிகம் பெற்ற மனிதர் எங்கெல்லாம் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் அழகு கலைகள் வளர்க்கப்பட்டுள்ளன என்பதற்கு சான்றாக திருவட்டார் கோவிலையும் கூறலாம்.

## வியாளி வடிவங்கள்

கோவிலுக்குள் ஏராளம் வியாளி வடிவங்களை நாம் பார்க்க முடியும். யானையின் துதிக்கையும் சிங்கத்தின் முகம் உள்ள ஒரு விலங்கு. இது வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த ஒரு விலங்கின் வடிவம் என்று கருதலாம். பலிக்கல் மண்டபத்தின் மேற்கு பிரகாரத்தில் மட்டும் ஆறு வியாளிசிற்பங்கள் உள்ளன. ஆயுதமேந்திய வீரர்கள் பெரிய வியாளியின்மேல் அமர்ந்து பாய்ந்து செல்வது போன்ற ரூபங்கள் மண்டபத்தின் நுழைவு வாயில் அழகு பெறச் செய்கிறது. இங்குள்ள சிற்பங்களில் வடிவமைக்கப்பட்ட பறவைகள் ஊர்வன விலங்குகள் போன்றவைகளின்தோற்றங்கள் மேலும் இன்றைய கால வடிவங்களில் இருந்து வேறுபட்டுள்ளதையும் கண்கூடாக பார்க்க முடியும்.இன்று நாம் பார்க்கின்ற பறவைகள் மிருகங்கள் போன்றவையின் வடிவங்களை விட அதாவது பரிணாம மாற்றம் வருவதற்கு முன் உள்ளவற்றை கல் தூண்களிலும் சுவர்களிலும் நாம் பார்க்கும் போது நம்மை சிந்திக்க வைப்பதாக அமைகிறது.

## சபா மண்டப கலை வடிவங்கள்

சபா மண்டபம் என்று கூறப்படும் பலிக்கல் முறையில் இரு பக்கங்களிலும் காணப்படும் சிலைகள் ராமாயண யுத்த காண்டத்தில் உள்ள நிகழ்ச்சிகள் என்றும் மகாபாரத காட்சிகள் என்றும் கூறுகிறவர்கள் உள்ளனர். பலிக்கல்புரையை கடந்து சென்றால் வலது பக்கமாக தோற்றமளிக்கும் மனோகரமான இந்திரஜித்தின் சிற்பமானது இடப்பக்கம் நிற்கும் அர்ஜுனனை நாகஸ்திரம் அனுப்பி கீழ்ப்படுத்துகின்ற காட்சி என்றும் கர்ணன் அர்ஜுனனும் போர் புரியும் காட்சி என்றும் கூறுகிறார்கள். அதே சிலையின் பக்கங்களில் சர்வாக சுந்தரியான ஒரு அப்சர கன்னிகையின் கையில் வரணமாலையுடன் வெற்றி வீரனின் கழுத்தில் சார்த்த இருப்பது போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த கோவில் சிற்பங்கள் அனைத்தும் கவர்ச்சியும் அழகும் மிகுந்தவையாக காட்சியளிக்கிறது. அதுமட்டுமின்றி சபா மண்டபத்தில் இரு பக்கங்களில் உள்ள சிற்பங்கள் மிகவும் நுணுக்கமான சிற்பக் கலையைப் பறைசாற்றுவதாகவும் சிற்ப சாஸ்திர விதிகளை கருத்தில் கொண்டும் அமைக்கப்பட்டுள்ளது.

சபா மண்டபத்தின் வலது பக்கம் இரண்டாவதாக தெரியும் தூணில் மிக அழகான வேணுகோபால மூர்த்தியை செதுக்கி உள்ளனர். அது பார்ப்போரைக் கவர்ந்திழுக்கும் விதமாய் பகவத்கீதை சுட்டுகிற கிருஷ்ணரின் வேணு நாதத்தில் மயங்கி, தன்னுடைய இயற்கை குணமான பகைமை குணம்மறந்து, பசுக்களுடன் இணைந்து நிற்கின்ற கொடிய விலங்குகளின் தோற்றமானது மிகவும் அழகாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. பசுவின் மடியில் இருந்து பால் குடிக்கும் புலி குட்டியையும் சர்ப்பத்தின் தலையில் இருந்து வேணுநாதத்தில் மயங்கி உள்ள எலிகளையும் காட்சிப்படுத்தும் விதத்தில் அழகாக செதுக்கப்பட்டுள்ளன.

இதன் அடுத்த தூணில் சிவனின் கங்காளநாத வடிவம் கொண்ட சிற்பம் உள்ளது. மிருதங்க ஆலாபனை செய்கின்ற ஒரு இளம்பெண் உண்மையில் உயிரோடு நின்று பாடுவது போன்றும்

DOI: 10.34256/irjt21432

அதுமட்டுமின்றி, உயிருள்ள கலை நயத்தின் வெளிப்பாடாக வயதான மனிதன் குச்சி ஊன்றி, முதுகில் பூ பறித்து போடக்கூடிய கூடையும் சுமந்து கொண்டு நடந்து செல்கின்ற சிற்பமும் உயிருள்ள வடிவத்தையே காட்சிப்படுத்துகிறது. குட நம்பிமார்களின் சிற்பமும் அவர்கள் நீண்ட உச்சி உள்ள ஓலக்குடையும் மூன்று பிரிவு உள்ள பூணூலும் போட்டு நடந்து வரும் காட்சியானது அக்கால மக்களின் பண்பாட்டினை கண்டறிந்து கொள்ள முடிகிறது.

ஒரு கையில் மணிமறு கையில் தீபாரதனை தட்டும் ஏந்திய போற்றிமார்களின் சிற்பங்களும் உள்ளன. மிகவும் வயது முதிர்ந்த ஒரு சாந்தி காரர் கையில் ஊன்றுகோல் மறுகையில் கிண்டியும் பிடித்தபடி அமைந்த சிற்பமும் தத்ருபமாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

அதுபோன்று சிற்பக்கலைஞர்கள் தங்கள் கலை நயத்தை வெளிப்படுத்தும் விதத்திற்கு சான்றாக பெண்ணின் 18 விதமான சிற்பங்களை நாம் திருவட்டார் கோவிலில் காண முடியும். அதாவது இரு கால்களையும் நீட்டிய கோலம், கால்கள் விரித்து முழங்கால் வரை மட்டும் ஆடை அணிந்து நிற்கும் பெண், மகப்பேறு நடத்தும் பெண்ணின் உருவம், பேற்றுநோவு உடன் குத்தியிருக்கும் பெண்ணின் வடிவம், கையில் வால் கண்ணாடியில் முகம் பார்க்கும் பெண், வாள் மற்றும் பரிசயும் ஏந்தி இருக்கும் பெண் போராளியின் உருவம், பந்தம் வீசி அந்த வெளிச்சத்தில் நடந்து செல்கின்ற பெண் என பல உருவங்கள் கண்கொள்ளாக் காட்சியாக பிரமிப்பை ஏற்படுத்துவனவாகவும் உள்ளன.

இது மட்டுமின்றி வாத்திய மேளகாரர்கள் நாட்டிய கலைஞர்கள் போன்றவர்களின் 12 சிற்பங்களும் உள்ளன. அதுபோல நாட்டிய மகளிர் சிற்பங்களும் உள்ளன. அதுபோல முகலாயப் பயிற்சியாளர்களின் சிற்பங்கள் மற்றும் மகுடி வாசிக்கும் பாம்பாட்டியின் சிற்பங்களும் கலைநயத்தை வெளிப்படுத்துவதாக உள்ளன.

## மர சிற்பங்கள்

ரதி மன்மதன்மார்களின் சிற்பங்களும் கலைநயத்தை வெளிப்படுத்தும் பாங்கில் உள்ளன. பிரம்மா, இந்திரன், வியாக்கியபாதன், உக்கிரத்தாண்டவர், ஸ்ரீ ராமர், லட்சுமணன், பிரகலாதன், இரணியன் போன்றவர்களின் மர சிற்பங்களையும் கோவிலின் மேற்கூரையில் காணலாம். பலிக்கல் புரையில் கங்காளநாதன், பதஞ்சலி, தாண்டவர், சங்கு, நூடன், சரபம், கதால பைரவர் போன்ற சிற்பங்களும் உள்ளன.

## சிற்பங்களின் தற்போதைய நிலை

தற்போது பலிக்கல்புரை என்று கூறப்படும் சபா மண்டபத்தின் பக்கங்களில் காணப்படும் சிற்பங்கள் பலவும் சமூக விரோதிகளின் செயல்களால் நாசம் செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## முடிவுரை

கோவில் சிற்பங்கள் அனைத்தும் பண்பாடு மற்றும் வரலாற்றை அறிய உதவும் சான்றுகளாக உள்ளன. சுருக்கமாக கூறினால் மனித வாழ்க்கையை ஆத்மிய பெருமையுடன் இணைந்து குறுகலான இடத்திற்குள் கலைக்களஞ்சியம் அமைத்தது போன்று காட்சி அளிக்கிறது. இவ்வமைப்பு திருவட்டார் கோவிலுக்கு தனியாக ஒரு பெருமையைக் கொடுப்பதாக அமைகிறது. கண்களால் கண்டு இன்புறத்தக்க வகையில் திருவட்டார் கோயில் கலை வடிவங்கள் காணப்படுகின்றன.

## References

Venkadasamy, S. (2003) Tamil Valartha Alagu Kalaikal, Vasantha Veliyedu, Chennai, India

Venkadasamy, S. (2006) Tamil Nun Kalaikal, Poompuhar Pathippagam, Chennai, India

DOI: 10.34256/irjt21432

Funding: NIL

Acknowledgement: NIL

Conflict of Interest: NIL

About the License:

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License